## சுருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை – கால்நடை பராமரிப்புத்துறையில் 6818 தற்காலிகப் பதவிகளின் பணிக்காலம் 1.1.2016 முதல் 31.12.2018 வரை நீட்டிக்கப்படுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப.2) துறை

அரசாணை (நிலை) எண்.147

நாள் : 24.10.2019
விகாரி வருடம், ஐப்பசி – 07
திருவள்ளுவர் ஆண்டு : 2050

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.98, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2)துறை, நாள் 15.04.2013.
2. அரசாணை (நிலை) எண்.107, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2)துறை, நாள் 22.04.2013.
3. அரசாணை (நிலை) எண்.307, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2)துறை, நாள் 21.11.2013.
4. அரசாணை (நிலை) எண்.66, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2)துறை, நாள் 03.04.2014.
5. அரசாணை (நிலை) எண்.163, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2)துறை, நாள் 31.10.2016.
6. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களின் கடித நக.எண். 54242/ ஆர்ஆர்1/2016, நாள் 24.11.2016 மற்றும் 26.4.2019.
7. அரசு கடித எண்.17612/கா.ப.2/2016–22, கால்நடை பராமரிப்பு, பல்வளம் (ம) மீன்வளத் (காப2) துறை, நாள் 28.08.2019.
8. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களின் கடித நக.எண்.54242/என்2/2019, நாள் 12.09.2019.

•••••

**ஆணை :**

மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் 1.1.2015 முதல் 31.12.2015 முடிய 6984 தற்காலிகப் பதவிகளுக்கு பணிக்கால நீட்டிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. கால்நடை பராமரிப்புத் துறையில் அன்றாட அலுவலகப்பணிகள் மற்றும் தொழில்நுட்பப் பணிகள் பாதிக்காமல் செயல்படவும், கால்நடை நிலையங்களில் வரும் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கவும் தடுப்பூசி போடவும், கால்நடைகளுக்கு சிறந்த முறையில் செயற்கை முறை கருவூட்டல் பணி மூலம் கருத்தரிப்பு மேற்கொள்ளவும், தரம் குன்றிய கால்நடைகளை ஆண்மை நீக்கம் செய்திடவும், பொது மக்கள் நலன்கருதி கால்நடைகளுக்கு உறைவிந்து குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் விநியோகம் செய்திடவும், கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளில் அனைத்து கால்நடை மற்றும் கோழியின நோய்கள் கூர்ந்து கண்காணித்து சரியான தடுப்பு நடவடிக்கைகளை வகுத்து நோய் கிளர்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்கள் சேகரித்து நோய் உண்டாக்கக் கூடிய இடங்கள் கண்டறிந்து கால்நடைகளுக்கு முன் எச்சரிக்கை

நடவடிக்கைகளான தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளவும் கால்நடைகளுக்கு ஏற்படும் உயிர் சேதங்களிலிருந்து அவைகளை பாதுகாக்கவும், மாதிரி வரைவு திட்டம், கால்நடை கணக்கெடுப்பு, கால்நடைகளின் புள்ளி விவரம் சேகரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள அனைத்து தற்காலிக பதவிகளும் அத்தியாவசியமாகவும், இன்றியமையாததாகவும் தேவைப்படுவதால் 6818 எண்ணிக்கை அடங்கிய தற்காலிக பதவிகளை 01.01.2016 முதல் 31.12.2018 முடிய உள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்சி செய்வது அத்தியாவசியமாகும் என்பதால் 6818 தற்காலிக பதவிகளுக்கு 01.01.2016 முதல் 31.12.2018 முடிய ஒரே அரசாணையாக, தொடராணை வழங்குமாறு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முன்பக்கம் பத்தி இரண்டில் உள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, 6818 தற்காலிகப் பதவிகளுக்கு, இவ்வரசாணையின் இணைப்பு–I மற்றும் IIல் கண்டுள்ளவாறு 1.1.2016 முதல் 31.12.2018 வரை மூன்றாண்டு காலத்திற்கு நீட்டித்து தொடராணை வெளியிடப்படுகிறது.

4. மேற்குறிப்பிட்ட 6818 தற்காலிகப் பதவிகளுக்கு, பணிக்கால நீட்டிப்பு அளிக்கப்படுவதால் ஏற்படும் செலவினம், இவ்வரசாணையுடன் உள்ள இணைப்பு–II-இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. முன்பக்கம் பத்தி இரண்டில் நீட்டிப்பு வழங்கப்பட்ட தற்காலிகப் பதவிகளிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் ஆணைகளின்படி அனுமதிக்கப்பட்ட சம்பளம் மற்றும் வழக்கமான படிகளைப் பெறத்தகுதியுடையவர்கள் ஆவர்.

6. மேலும், இவ்வரசாணை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்துமாறு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:-

அ) நிரப்பப்பட்ட பதவிகளுக்கு மட்டுமே தொடராணை கோரப்பட வேண்டும்.

ஆ) கால்நடை பராமரிப்புத்துறையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள காலிப்பணியிடங்களை அரசின் முன் அனுமதி பெற்றே நிரப்ப வேண்டும்.

இ) மேலும், இவ்வரசாணையில் உள்ள பணியிடம், ஊதிய ஏற்ற முறை, தர ஊதியம் ஆகியவற்றை சரிபார்த்து செயல்படுத்த வேண்டும்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.46996/நிதி (காப,பாவ(ம)மீ/ 2019, நாள்:21.10.2019 –ல் பெற்ற இசைவோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை – 35.
அனைத்து மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ,
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள், சென்னை – 35. (வழியாக)

அனைத்து மாவட்ட கருவூல அலுவலகம்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை -35.
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்).
கருவூல கணக்கு அலுவலர், சென்னை- 1.
சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை- 9.

நகல்:
நிதித் துறை, சென்னை-9.
அரசு முதன்மை செயலாளரின் தனிச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

30.10.19.
பிரிவு அலுவலர்.